


சென்னையில் பால்வளம் மற்றும் காதித் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் நேற்று (01.01.2025) கதர் மற்றும் கிராமத் தொழில் வாரிய துறையின் புதிய இரக பட்டு மற்றும் இதர புதிய பொருட்கள் அறிமுகம் செய்து விற்பனையை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர் திருமதி வி.அமுதவல்லி, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தன் தலைமைச் செயல் அலுவலர் முனைவர் ப.மகேஸ்வரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 'வேர்களைத்தேடி' பண்பாட்டு கலைப் பயணமாக கன்னியாகுமரிக்கு வருகை தந்த -

## புலம்பெயர் தமிழர்களுடன் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வரவேற்று கலந்துரையாடினார்!

திருவள்ளூர், ஜன.2

கன்னியாகுமரி விருந்தினர் மாளிகையில் வேர்களைத்தேடி பண்பாட்டு கலை பயணமாக கன்னியாகுமரிக்கு வருகை தந்த புலம்பெயர் தமிழர்களை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் வரவேற்று அவர்களுடன் கலந்துரையாடினர்

இதனை தொடர்ந்து தெரிவிக்கையில்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் குழந்தைகள் இளம் மாணவர்கள், தாய்த்தமிழ்நாட்டின் மரபின் வேர்களோடு உள்ள தொடர்பை புதுப்பிக்கும் வண்ணம், ஆண்டுக்கு 200 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு பண்பாட்டு சுற்றுலாவிற்கு அழைத்துவர ஏற்பாடு செய்யப்படும் என அறிவித்தார்கள்.

அதனடிப்படையில், இந்த பண்பாட்டு பயணம் 'வேர்களைத் தேடி" என்ற பெயரில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம் மூலம் சுற்றுலாத்துறை, பண்பாட்டுத்துறை. இந்து சமய அறநிலையத்துறை, தொல்லியல் துறை, காவல் துறை மற்றும் வருவாய்த் துறை உள்ளிட்ட பிற துறைகளுடன் இணைந்து இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டது. இந்த இரண்டு கட்ட பயணத்தில் 157 அயலகத்தமிழ் மாணவ, மாணவியர்கள் முதன்முறையாக தமிழ்நாட்டிற்கு அழைத்துவரப்பட்டு தமிழின் தொன்மை, தமிழர் வாழ்வியல் கலாச்சாரம் குறித்து விளக்கப்பட்டது. தமிழர்களின் கலைகளை அறிமுகப்படுத்தும் விதமாக கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டது.

தொடர்ந்து மூன்றாம் கட்ட பயணமாக உகான்டாவை சேர்ந்த 1 புலம்பெயர் தமிழர், நார்வேயை சார்ந்த 1 புலம்பெயர் தமிழர், தென் ஆப்ரிக்காவை சேர்ந்த 1 புலம்பெயர் தமிழர், மொரிசியசை சார்ந்த 10 புலம்பெயர் தமிழர்கள், மலேசியாவை சேர்ந்த 11 புலம்பெயர் தமிழர்கள், இலங்கை சார்ந்த 6 புலம்பெயர் தமிழர்கள்,ஆஸ்திரேலியாவை சேர்ந்த 4 புலம்பெயர் தமிழர்கள் கனடாவை சேர்ந்த 1புலம்பெயர் தமிழர். அமெரிக்காவை சேர்ந்த 2புலம் பெயர் தமிழர்கள் மற்றும் மியான்மரை சேர்ந்த 1புலம்பெயர் தமிழர் ஆகிய 10 நாடுகளைச் சேர்ந்த 38 அயலகத்தமிழ் மாணவ மாணவியர்களுடன் 29.12.2024 அன்று தொடங்கப்பட்டு 12012025 அன்று வரை நடைபெறும். இக்கலை பயணமானது அயல்நாடுகளில் வாழும் 18 முதல் 30 வயதுக்கு உட்பட்ட தமிழ் இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு வரவழைத்து தமிழ் மற்றும் தமிழர்களின் பெருமிதங்களை உணரும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்று சிறப்புமிக்க இடங்களுக்கு. தமிழ்நாடுஅரசு சார்பில் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

இவ்வாறு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் புலம்பெயர் தமிழக மாணவ மாணவியர்களுக்கு நினைவு பரிசு வழங்கினார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ. கோவிந்தராஜன், அயலகத்தமிழர் நல வாரிய துணை இயக்குநர் கிராமேஷ். அயலகத்தமிழர் நல வாரிய உறுப்பினர் மீரான், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் செந்தூர் ராஜன், அலுவலர்கள், புலம்பெயர் தமிழக மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

### மாநகராட்சி 1-வது மண்டலம் 11-ஆவது வார்டில்

# அரசு மருத்துவமனைக்கு ரூ.50 லட்சத்தில் மருத்துவ உபகரணங்கள்!

## டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. வழங்குகிறார்!

சென்னை, ஜன.2-

கடந்த மூன்று ஆண்டுகளின் தொடர் முயற்சியால் (LNG) நிறுவனத்தின் முதல் சமூக பொறுப்பு நிதி (CSR) மூலம் திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மண்டலம்1, வார்டு11ல் அமைந்துள்ள அரசு மகப்பேறு மருத்துவமனைக்கு ரூபாய் 50 லட்சங்கள் மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்களை வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி இன்று (02.01.2025 - வியாழக்கிழமை) காலை 10:30 மணியளவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மருத்துவமனை நிர்வாகத்திடம் அர்ப்பணிக்கிறார்.

இந்நிகழ்வில் சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, 1வது மண்டலக் குழுத் தலைவரும், திருவொற்றியூர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் தி.மு.தனியரசு, வட்டக் கழகச் செயலாளர் முனுசாமி, மாமன்ற உறுப்பினர் திருமதி.சரண்யா, மாவட்டக் கழக பகுதிக் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

### எஸ்.முரளி, வே.வெற்றிவேல், அ.தவநேசன் முன்னிலையில்

# 125வது வார்டு மேம்பாட்டு நிதியில் நியாய விலைக் கடை!

# மயிலை த.வேலு திறந்து வைக்கிறார்!

## அ.ரேவதி எம்.சி. தலைமையில் கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை ஜன.2

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலாப்பூரில் உள்ள டும்மிங் குப்பம் மக்களின் நீண்ட நாட்கள் கோரிக்கையை ஏற்று மாமன்ற உறுப்பினர் அ.ரேவதி, 125வது வார்டு மேம்பாட்டு நிதியிலிருந்து நியாய விலை கடை இன்று (02-01-2025) காலை 10 மணி அளவில் தென்மேற்கு மாவட்ட செயலாளரும் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினருமான மயிலை த.வேலு எம்.எல்.ஏ திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மயிலை கிழக்கு பகுதிச் செயலாளர் எஸ்.முரளி, வட்டச் செயலாளர் வே. வெற்றிவேல், அ. தவநேசன் மு.தம்பிதுரை, செல்வி சௌந்தர்ராஜன், டி. தினகரன், என். இளங்கோ, ஏ.ஆர்.அமுல்ராஜ், டி.வின்சென்ட், பா.முருகேசன், டோமினிக், மைக்கேல் அகஸ்டின், ரஞ்சிதம்,சுரேஷ், செல்வகுமார், முனுசாமி, வினோத், சூசையம்மாள், லோகா, மரியா, கேபிள் ராஜ், அருண் ரோஸ், இருதயராஜ், ராஜரத்தினம், கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர் மற்றும் மூன்று ஊர் மக்கள் சார்பில் நன்றி கூறுகின்றனர்.

# சைதை மேற்கு 139 'அ' வட்டக் கழகக் கூட்டம்!

## எம்.கிருஷ்ணமூர்த்தி - பரிதி இளம் சுருதி -சை.மு.சேகர் பங்கேற்பு!

சென்னை ஜன. 2 -

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர். மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தலின் பேரில், சைதை மேற்கு பகுதி 139 அ வட்டத்திற்குட்பட்ட அனைத்து நிர்வாகிகள் மற்றும் பாகப் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் ஆர். சுரேஷ் இல்ல மாடியில் வட்ட அவைத்தலைவர் இ.வரதன் தலைமையில், வட்டச் செயலாளர். சை.மு.சேகர் முன்னிலையில் நடைப்பெற்றது . இக்கூட்டத்தில் 1) 2025 ஜனவரி மாதம் 2 ஆம் தேதி காலை 9 மணிக்கு முதலமைச்சர் தளபதி அவர்கள் பஜார் வீதியில் உள்ள சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் கலைஞர் திறன் மேம்பாட்டு மையம் திறப்பு விழாவில் கலந்து கொள்வது குறித்தும் 2) ஜனவரி மாதம் 4ஆம் தேதி மாலை 4மணிக்கு நந்தனம் ஒய்.எம்.சி.ஏ.திடலில் . அமைச்சர். மா.சுப்பிரமணியன் எழுதிய கின்னஸ் கலைஞர் நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வது குறித்தும்

3) தமிழ்ப்புத்தாண்டு பொங்கல் விழா முன்னிட்டு ஜனவரி மாதம் 7 ஆம் தேதி அன்று வட்டம் முழுவதிலும் கோலம் போடும் நிகழ்ச்சி வட்டத்தில் உள்ள அனைத்து தெருக்களிலும் பொது மக்கள் கலந்து கொள்ள செய்வது குறித்தும் சைதை சாதிக்,பகுதி செயலாளர். எம்.கிருஷ்ணமூர்த்தி, சைதை தொகுதி பொறுப்பாளர் பரிதி இளம் சுருதி விளக்கி பேசினர்.

பங்கேற்றவர்கள்.வீ.மதிவாணன், மா.ஏழுமலை,பி. எஸ்.பிரகாஷ், சுமதி தீனதயாளன், வெ.புருசோத்தமன், என்.தீனதயாளன்,ப. நரேஷ் சார்ப்.சரவணன், பூ.பாஸ்கர், ஜி.ஏழுமலை, கொடி.து.சுரேஷ்பாபு, டி. கோபாலகிருஷ்ணன், எஸ் . முகமது அலி, யமஹா. ராஜேஷ், நியு காலனி சம்பத்,கே.விஜயகுமார், வி. வாசுதேவன், என்.ரமேஷ், எஸ்.கண்ணன்,ஆர்.பெருமாள், ஆர்.தாமோதரன், ப.சிவகுமார், எஸ்.சையத் ஜலால் (எ) ஜானி, துளசி சந்திரசேகர்,இ.வ.ரகுபதி, மு.காத்தவராயன், ஆட்டோ.சேகர், எம்.சுந்தரேசன், த.சேகர், ஜி.நாகதேவி,கே.பாரி,கே.வெங்கடேசன், வி.வெங்கடேசன், டி.சரவணன், என்.எஸ். கார்த்திக்.எஸ்.அருண்குமார், எஸ்.பி.தினேஷ்,எஸ். முருகன், ஆர்.கண்ணன்,து. மா.பொ.சி,கா.மூர்த்தி, மற்றும்மூ.வினோத்குமார், கொரியர்.சுரேஷ், ப. மோகன்,ஏ.எம்.சேகர், எம்.பிரகாஷ், பட்டாபி, ஆர்.சுரேஷ், எஸ்.பச்சையப்பன்,சி.மதியழகன், ஜி.சீனிவாசன்,கே.வேலாயுதம், ஜி.வெற்றிவேல்,டி. எம்.அமீன், ஆ.சிவகுமார், எஸ்.ரமேஷ், கே.விஜய், எஸ்.கிஷோர், பி.ஜே.சந்தோஷ்,ஜெ.மாறன், எஸ். ஜீவா, எம்.சஞ்சய், மற்றும் பலர் கலந்து கொண்டனர் வட்ட துணைச் செயலாளர் பி.எஸ்.பிரகாஷ் நன்றி கூறினார்.

### துணை அமைப்பாளர் ஜி.கே.இனியன் ஏற்பாடு! மீ.வே.கர்ணாகரன் முன்னிலை!

# துணை முதல்வர் பிறந்தநாள்: அரசு பள்ளி மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்!

## மாவட்டச் செயலாளர் – மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஜன. 02

துணை முதல்வரும் கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட துணை அமைப்பாளர் ஜி.கே.இனியன் ஏற்பாட்டில் செங்குன்றம் அடுத்த அரசு பள்ளி மாணவர்களுக்கு வாலிபால், கேரம், கிரிக்கெட் உள்ளிட்ட விளையாட்டு உபகரணங்களை மாவட்டச் செயலாளர் - மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார்.



துணை முதல்வரும் கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட துணை அமைப்பாளர் ஜி.கே.இனியன் ஏற்பாட்டில் செங்குன்றம் அடுத்த அரசு பள்ளி மாணவர்களுக்கு வாலிபால், கேரம், கிரிக்கெட் உள்ளிட்ட விளையாட்டு உபகரணங்களை மாவட்டச் செயலாளர் – மாதவரம் எஸ்.சுதர்சனம் வழங்கினார். ஒன்றிய செயலாளர் மீ.வே. கர்ணாகரன் முன்னிலை வகித்தார். இந்நிகழ்வில் ஆர்.இ.ஆர். விப்ரநாராயணன், புள்ளிலைன் மு.ரமேஷ், அ.காசிம் முகம்மது, கி.வீரம்மாள், பொன்.கோதண்டன், நா.பரசுராமன், ஞானம், மாலதி மகேந்திரன், பாபு, துளசி ராஜேந்திரன், ஜி.ஆர். பத்மநாபன், ஜெகன், விஜய், ஏ.டேவிட், திராவிட டில்லி, தேரா அருண்குமார், முஜீப், செபாஸ்டின் உள்ளிட்ட மாவட்ட அணிகள், இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சிக்கு சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளரும் சோழவரம் ஒன்றிய துணைப் பெருந்தலைவருமான மீ.வே. கர்ணாகரன் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்வில் செங்குன்றம் பேரூராட்சி துணைத்தலைவர் ஆர்.இ.ஆர். விப்ரநாராயணன், மாவட்ட பிரதிநிதி புள்ளிலைன் மு.ரமேஷ், சோழவரம் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் அ.காசிம் முகம்மது, கி.வீரம்மாள், பொன்.கோதண்டன், கலை இலக்கியம் பகுத்தறிவு பேரவை மாவட்ட துணை அமைப்பாளர் நா.பரசுராமன், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஞானம், ஒன்றியக் கவுன்சிலர் மாலதி மகேந்திரன், நெற்குன்றம் ஊராட்சி மன்றத் தலைவர் பாபு, துளசி ராஜேந்திரன், சோழவரம் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜி.ஆர். பத்மநாபன், ஜெகன், விஜய், புழல் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஏ.டேவிட், புழல் ஒன்றிய நிர்வாகிகள் திராவிட டில்லி, தேரா அருண்குமார், முஜீப், செபாஸ்டின் உள்ளிட்ட மாவட்ட அணிகள், இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# சென்னை தென்மேற்கு மாவட்டம்

# மயிலாப்பூர் - தியாகராயர் நகர் பகுதிகளில் பொங்கல் பரிசளிப்பு விழா நிகழ்ச்சிகள்!



## மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவிப்பு!

நிகழ்ச்சிகள் அட்டவணை

| நாள் | கிழமை | வட்டம் | நேரம் | வட்டச் செயலாளர் | இடம் |
|---|---|---|---|---|---|
| 08.01.2025 | புதன் கிழமை | 125 | மாலை 7.00 மணி | அ.தவநேசன், | சமுதாய நலக்கூடம் அம்பேத்கார் பாலம் |
| 09.01.2025 | வியாழக் கிழமை | 125அ | மதியம் 1.00 மணி | வி.வெற்றிவேல் | சக்தி கல்யாண மண்டபம் |
| | | மாலை 6.00 மணி | | மாவட்ட கழக சார்பில் பொங்கல் பரிசளிப்பு | மாவட்ட அலுவலகத்தில் |
| 10.01.2025 | வெள்ளிக் கிழமை | 126 வது | மாலை 5.00 மணி | கோ.கண்ணன் | லாசரஸ் சர்ஜ் ரோடு |
| | | 123 அ | மாலை 6.00 மணி | மூ.இ.ஏழுமலை | மந்திர மூர்த்தி மஹால் |
| | | 121 வது | மாலை 7.00 மணி | D.ராஜவேலு | ராம் மந்தீர் மண்டபம் (தண்ணீர் துறை மார்கெட்) |
| 11.01.2025 | சனிக் கிழமை | 122 வது | காலை 11.00 மணி | ராஜா சுரேஷ்குமார் | கே.பி.தாசன் சாலை |
| | | கிழக்கு பகுதி | மாலை 5.00 மணி | மயிலை கிழக்கு பகுதி | கிழக்கு பகுதி அலுவலகம் |
| | | 141 வது | மாலை 7.00 மணி | தியாகராய நகர் கிழக்கு பகுதி | காமராஜர் காலனி |
| 12.01.2025 | ஞாயிற்றுக் கிழமை | மேற்குபகுதி | காலை 11.00 மணி | மயிலை மேற்கு பகுதி | கே.பி.தாசன் சாலை |
| | | 131 வது | காலை 9.00 மணி | மு.மா.செந்தில்குமார் | நல்லாங்குப்பம் |
| | | 133 வது | காலை 11.00 மணி | தியாகராய மேற்கு பகுதி | ராஜபிள்ளை தோட்டம் |
| | | 171 அ | முாலை 4.00 மணி | பா.பொன்னுசாமி | பட்டினம்பாக்கம், சீனிவாசபுரம் |
| | | 124 வது | மாலை 6.00 மணி | A.தாஸ் | சிலேட்டர் புரம் முண்டகண்ணியம்மன் ரயில் நிலையம் |
| 13.01.2025 | திங்கள் கிழமை | 121 அ | காலை 10.00 மணி | சீ.கிருஷ்ணமூர்த்தி | லாயிட்ஸ் ரோடு |
| | | 122 அ | குாலை 10.00 மணி | அ.நாகராஜ் | சி.பி.ராமசாமி சாலை அலுவலகம் |
| | | 123 அ | மாலை 11.00 மணி | மூ.ராஜேந்திரன் | குருபுரம் சென்மேரீஸ் ரோடு, சந்திப்பு |
| | | 124 அ | மாலை 7.30 மணி | மா.பா.அன்பு | P.K. மஹால் சித்திரகுளம் |
| 14.01.2025 | செவ்வாய் கிழமை | மாவட்ட கழகம் | காலை 11.00 மணி | சமத்துவ பொங்கல் | MLA அலுவலகம் |
| 15.01.2025 | புதன் கிழமை | 171 வது | மாலை 4.00 மணி | துரைபார்த்திபன் | டாக்டர். எம்.ஜி.ஆர் ஜானகி கல்லூரி |

**மயிலை த.வேலு எம்.எல்.ஏ.**

செயலாளர், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.